பயணிகள் வசதிக்காக

# மெட்ரோ ரெயில் நிலையங்களில் புதிய உணவு கடைகள்

சென்னை, ஜூலை. 25–
பயணிகள் வசதிக்காக மெட்ரோ ரெயில் நிலையங்களில் புதிதாக உணவு கடைகள் 6 இடங்களில் இந்த மாதம் இறுதியில் திறக்கப்படுகிறது.

சென்னை மாநகர போக்குவரத்து நெருக்கடியை குறைப்பதற்காக மெட்ரோ ரெயில் திட்டம் உருவாக்கப்பட்டது. முதல் கட்டமாக 42 கிலோ மீட்டர் தூரத்துக்கு பயணிகள் சேவை நடந்து வருகிறது. மெட்ரோ ரெயில் பயணி களை கவரும் விதமாக பல்வேறு சிறப்பு வசதிகளை மெட்ரோ நிறுவனம் செய்து வருகிறது.

உணவக கடைகள்

மெட்ரோ ரெயில் நிலையத்துக்கு வரும் பயணிகள் வசதிக்காக தற்போது புதியதாக 6 ரெயில் நிலையங்களில் சுவையான உணவு கடைகள் விரைவில் திறக்கப்படுகிறது.

கோயம்பேடு, திருமங்கலம், அண்ணாநகர் கிழக்கு, ஷெனாய்நகர், கீழ்ப்பாக்கம், நேரு பூங்கா ஆகிய ரெயில் நிலையங்களில் 10 சதுர மீட்டர் பரப்பளவில் ஒவ் வொரு கடைகளும் அமைக் கப்படுகிறது.

இந்த மாதம் இறுதியில் இந்த கடைகள் திறக்கப்பட உள்ளது. 3 உணவக கடைகள் தானியங்கி எந்திரம் மூலம் செயல்படும்.

அண்ணாசாலை

அண்ணாசாலை வழித்தடத்தில் அண்ணாசாலை, நந்தனம், சைதாப்பேட்டை, தேனாம்பேட்டை ரெயில் நிலையங்களில் 6 மாதங்களில் உணவக கடைகள் திறக்கப்பட உள்ளது. மிகப்பெரிய மெட்ரோ ரெயில் நிலையமான சென்ட்ரலில் வணிக வளாகம் அமைக்கப்படு கிறது. இது குறித்து மெட்ரோ ரெயில் அதிகாரி ஒருவர் கூறியதாவது:–

மெட்ரோ ரெயில் பயணிகள் வசதிக்காக சுவையான உணவு கடைகள் பூந்தமல்லி நெடுஞ்சாலை பகுதிகளில் உள்ள 6 சுரங்க மெட்ரோ ரெயில் நிலையங்களில் இந்த மாதம் இறுதியில் திறக்கப்படுகிறது. கோயம்பேடு, திருமங்கலம், அண்ணாநகர் கிழக்கு, ஷெனாய்நகர், கீழ்ப்பாக்கம், நேரு பூங்கா ஆகிய ரெயில் நிலையங்களில் இந்த கடை கள் அமைக்கப்படும். அண்ணாசாலை வழித்தடத்தில் உள்ள மெட்ரோ ரெயில் நிலையங்களில் 6 மாதத்துக்குள் உணவு கடைகள் திறக்கப்படும். சுவையான உணவு, திண்பண்டங்கள் இங்கு கிடைக்கும்.

உயர்மட்ட வழித்தட ரெயில் நிலையங்களான ஆலந்தூர், வடபழனி, அசோக் நகர், விமான நிலையம் ஆகிய பகுதிகளில் தற்போது பிரபலமான உணவு கடை கள் செயல்பட்டு வருகிறது. காபி, டீ, நொறுக்குத்தீனிகள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இவ்வாறு அவர் கூறி னார்.